ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/2 - 2017 දෙසැම්බර් මස 04 වැනි සඳුදා - 2017.12.04

2048/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் தடுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாக பயன்படுத்துவதை தடை செய்வதற்கான பணிப்புக்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 (ஆ) (4) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படுகின்ற அரசுக்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான எவையேனும் அசையும் அல்லது அசையா ஆதனங்களை தேர்தலொன்றின் போது கட்சி/ குழு/ வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் தடுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாக பயன்படுத்துவதை தடைசெய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்கள் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேகர,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2017, டிசெம்பர் 04.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிலயமைப்பின் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைக்கமைய, "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கோ சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால்

மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர். ஆதலால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களும் இவ்வறிவிப்புக்களுக்கு அமைவாக நடவடிக்கையெடுக்க வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இவ்விதிகளுக்கு அமைய நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு நிறுவன தலைவர்கள் வகைகூற வேண்டும். இவ்விதிகள் அனைத்து அரசாங்கங்களினதும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் செல்லுபடியாகும்.

அலுவலர்கள் :

(i) அரசாங்க அலுவலர்களின் ஆற்றல், அறிவு மற்றும் அவர்களது நேரம் என்பன அரசாங்க ஆதனங்களாதலால் எந்தவோர் அரச அலுவலருக்கும் தனது அலுவலக நேரத்திற்குள் அதாவது கடமைக்கு அறிக்கையிட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை லீவு பெறப்பட்டுள்ளவிடத்தும் அலுவலகத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகளற்ற அலுவலர்கள் லீவினைப் பெற்றேனும் அரசியல் பணிகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள் உள்ள அலுவலர்களுக்குக்கூட அலுவலக நேரத்திற்குள் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபட முடிவது ஏற்கனவே அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட அல்லது விசேட லீவின் அடிப்படையில் மாத்திரமேயாகும் ;

(ii) எந்தவோர் அலுவலருக்கோ அல்லது ஊழியருக்கோ அரசியல் நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களை அதாவது ஏனைய அரசாங்க அலுவலர்கள், வாகனங்கள், பிரச்சார உபகரணங்கள், அச்சு இயந்திரங்கள், தொலைபேசி வசதிகள் போன்ற அரசுக்கு சொந்தமான எதனையும் பயன்படுத்தும் உரித்துரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் முற்றிலும் தடையாகும்.

(iii) அரசியல் அமைப்புச் சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் தத்துவத்தின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பவற்றை ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்வதை தவிர்த்தல் வேண்டும் ;

(iv) தேர்தலோடு தொடர்புடைய பிரதேசங்களின் தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படவுள்ள அரசாங்க பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றல்கள், வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் செல்லும் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்கின்ற போது அரசியல் ரீதியான காரணங்களுக்காக அவ்விடமாற்றங்களை மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, அவ்வாறு மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்காதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். ஒழுக்காற்றுக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களுக்கு இவ்விதி செல்லுபடியாகாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இடமாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அது தொடர்பாக ஆணைக்குழுவை அறிவூட்டி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(v) தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர் ஆட்சேர்ப்புக்கள்/பதவியுயர்வுகள் என்பவற்றுக்கான நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டமொன்றை அல்லது உள்ளக பதவியுயர்வு செயற்திட்டமொன்றை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது நிறுவனத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றவிடத்தும் முழு நாட்டையும் அளாவிய ரீதியில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/பதவியுயர்வுகள் என்பன முறையாகவும் அரசியல் தலையீடுகளற்ற முறையிலும் மேற்கொள்ளப்படுவது பற்றி உரிய அதிகாரிகளுக்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்த சந்தர்ப்பங்களில் அதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை வழங்க முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) சுகாதார, சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு அலுவல்கள் தடைப்படுவதை தடுப்பதற்காக மற்றும் கட்டாய சேவைகளைப் பேணிச் செல்வதற்காக பிரதேச மட்டத்திலோ மாகாண மட்டத்திலோ ஊழியர்களை ஆட்சேர்ப்பதாயின் அத்தகைய ஆட்சேர்ப்புக்களும் கூட தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டோடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, எந்தவோர் அரசியல் ரீதியான தலையீடுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது.

3. வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள் :

(i) வைபவங்கள் :

தேர்தல் காலப்பகுதிக்குள் அரச நிதியைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான அடிக்கல் நாட்டுதல்கள், திறந்து வைப்புக்கள், மக்கள் உரிமைக் கையளிப்புக்கள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்களிப்போடு மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதனாலும் இத்தகைய சந்தர்ப்பங்களில் விழாக் கோலத்தோடு, அவை நடாத்தப்படுவதூடாகவும் ஏதேனும் ஒரு கட்சி/ குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்போ அல்லது கட்சிக்கு/ குழுவுக்கு/ வேட்பாளருக்கோ பாதிப்பு நிகழக்கூடுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்கள் மற்றும் பணிகளை ஒழுங்கமைப்பதையும் நடாத்துவதையும் தவிர்ந்துகொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட முன்னர் நாள் குறிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை இரத்துச் செய்யவோ ஒத்திவைக்கவோ முடியாதவிடத்து, அத்தகைய வைபவங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தேர்தல் ஏதேனுமொரு விதத்தில் அரச நிதியைச் செலவிட்டு இத்தகைய வைபவங்கள் நடாத்தப்படின் அத்தகைய சந்தர்ப்பமொன்றில் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பை ஏற்படுத்துமாயின், அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் வகைகூறுதல் வேண்டும். அத்தோடு, தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய வைபவங்கள் தொடர்பாக அவதானித்து அறிக்கைகளைப் பேணுவதற்காக உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்ட இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இத்தகைய வைபவமொன்றில் கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிப்புக்காகவோ, பாதிப்புற செய்வதற்காகவோ எவ்விதத்திலான கூற்றுக்களையும் வெளியிடல், செயற்பாடுகளை மேற்கொள்ளல், கொடிகள்/ பதாகைகள்/ சுவரொட்டிகள்/ பிரசுரங்கள்/ அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல் அல்லது பகிர்ந்தளித்தல் முற்றிலும் தடையென்பதோடு, அத்தகைய பணிகளை தவிர்ப்பது உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியளிப்பு மேற்கொள்கின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் கடமையாகும்.

(ii) நடமாடும் சேவைகளும் வர்த்தக கண்காட்சிகளும் :

மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கோடு அரச நிதி மற்றும் அரச ஆதனங்களை செலவிட்டு நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தக கண்காட்சிள் ஊடாகவும் கட்சி, குழு, வேட்பாளர் ஊக்குவிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் போக்கொன்று காணப்படுவதனாலும், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்ற பணிகளை ஒழுங்கமைப்பதையும் நடாத்துவதையும் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட முன்னர் நாள் குறிக்கப்பட்ட அத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்களை இரத்துச் செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ முடியாதவிடத்து, அத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏதேனுமொரு விதத்தில் அரச நிதியைச் செலவிட்டு இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் நடாத்தப்படின் அத்தகைய சந்தர்ப்பத்தில் கட்சி/ குழு வேட்பாளர் ஊக்குவிப்பு பாதிப்புற செய்தல் நிகழின் அது தொடர்பாக உரிய பணிகளை ஒழுங்கமைத்த அலுவலர்கள் வகைக்கூறுதல் வேண்டும். மேலும் தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள் வர்த்தக கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் தொடர்பாக அறிக்கைகளைப் பேணுவதற்காக உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இத்தகைய எந்தவொரு நடமாடும் சேவையிலோ, வர்த்தகக் கண்காட்சியிலோ அல்லது களியாட்டத்திலோ அல்லது அத்தகைய வேறொரு சந்தர்ப்பத்திலோ கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிப்பை இன்றேல், பாதிப்பை ஏற்படுத்தத்தக்க விதத்திலான எந்தவொரு கூற்றையும் வெளிப்படுத்தல், செயற்பாட்டை மேற்கொள்ளல், கொடிகள்/ பதாகைகள்/ சுவரொட்டிகள்/ பிரசுரங்கள்/ அறிவித்தல் போன்றவற்றை காட்சிப்படுத்தல் அல்லது பகிர்ந்தளித்தல் முற்றிலும் தடையென்பதோடு, அத்தகைய பணிகளை தடுப்பதற்கு உரிய பணியை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியளிக்கின்ற அரச நிறுவனங்களினதும் அலுவலர்களினதும் கடமையாகும்.

4. வசதிகளை, நன்கொடைகளை வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் விசேட கருத்திட்டங்களையும் செயற்படுத்தல் :

(i) மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அல்லது நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது மத்திய கால விசேட கருத்திட்டங்களை அல்லது வசதிகளை வழங்குகின்ற தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களைத் தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாதாயினும் தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் இத்தகைய விசேட கருத்திட்டங்கள் அல்லது தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களூடாக கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களை ஊக்குவிக்கும், தடுக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கக் கூடாது.

(ii) தேர்தல் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களூடாக கட்சிகள், குழுக்கள், வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதாவென ஆணைக்குழு கண்காணிக்கும்.

(iii) தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கத்தின் காணி உரித்து அல்லது வீட்டுரிமை என்பவற்றைக் கையளிக்கின்ற உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கு அல்லது விவசாய நடவடிக்கைகளுக்கான மானிய உதவிகள், உரம், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழிலுக்கான கருவிகள், மிதிவண்டிகள், சூரியவலு விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டிடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிக்கின்ற கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக் கடன்களின் விநியோகம்/ நட்டஈடு வழங்கல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்துவதால் மக்களின் தேவைப்பாடுகளை ஆற்றிக்கொள்வதற்கான தடங்கலொன்று ஏற்படுவதாக தெரியவரின் அது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஏதேனுமொரு விதத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி பெறப்பட்டுள்ள இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவிருப்பின் அப்பணிகளை அவ்விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் கட்சி, குழு, வேட்பாளர் ஊக்குவிப்பு அல்லது பாதிப்புற செய்தல் நிகழாதவாறு அப்பணிகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவது அப்பணிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களின் பொறுப்பாகும்.

வாகனங்கள் :

(i) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், லொறி வண்டிகள், பஸ் வண்டிகள் அனைத்து அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் இவ்வாகனங்களை எந்தவோர் அரசியல் கட்சியினதும், சுயேச்சைக் குழுவினதும் அல்லது வேட்பாளர் ஒருவரினதும் தேர்தல் பிரச்சார அலுவல்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலப்பகுதிக்குள் வாகன குழாத்தைப் பேணுதல் மற்றும் குறித்தொதுக்குவதில் முனைப்பான கவனம் செலுத்த வேண்டும். அலுவலர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகைக்கு பெறப்பட்டு கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பனவும், இவற்றில் உள்ளடங்குமென்பதை கருத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) வாகனங்கள் தவிர்ந்த முக்கியமாக குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்டக் குறிப்புக்களை முறையாகப் பேணி வரவேண்டுமென்பதோடு, இவ்வோட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லையென்பது தொடர்பாக திருப்தி காணுதல் வேண்டும். கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக போலிக் குறிப்புக்களையிட்டு அரச வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு அலுவல்களுக்காக அல்லது அத்தகைய சட்ட ரீதியற்ற விடயங்களில் அரச வாகனங்களை ஈடுபடுத்தப்படாமைக்கு பொறுப்பாதல் வேண்டும்.

(ii) சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவிற்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு வாகனத்தையும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட உரிய பதிவிலக்கமின்றி செலுத்த முடியாததலால் எந்தவோர் அமைச்சருக்கோ, பிரதி அமைச்சருக்கோ அல்லது அவர்களின் பணியாட் குழுவின் அங்கத்தினர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ உரிய பதவிலக்கமின்றி அரசாங்கத்தின் அல்லது அரச சார்பான நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால் அனைத்து திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் திருத்தங்களுக்குரிய இலக்கங்களில் (போலி இலக்கங்களில்) சேவையிலீடுபடுத்தப்படவில்லையென்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

3. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்கள் மற்றுலா விடுதிகள் ஆகியன :

(i) அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரசாங்கத்தின் வளங்களாகும். ஆதலால் அக்கட்டிடங்களையும் அரசியல் கூட்டங்கள், கலந்தாய்வுகள் என்பவற்றிற்குப் பயன்படுத்தக் கூடாது. சாதாரண காலங்களில் எந்தவோர் அரசியல் கட்சிக்கு/ குழுவுக்கு பணம் செலுத்தி குறித்தொதுக்கிக் கொள்ள முடியுமான கட்டிடங்கள் மற்றும் மண்டபங்களைத் தேர்தல் காலப்பகுதியினுள் உரியவாறு கட்டணம் அறவிட்டு எந்தவோர் கட்சிக்கு/ குழுவிற்கு வேறுபாடு காட்டாதவாறு

வழங்குவதற்கு இந்த பணிப்புரைகளால் தடையொன்று உள்ளதாகக் கருதக்கூடாது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை பங்களாக்கள் என்பவற்றைக் காரணமின்றி வழங்குதல் முற்றிலும் தடையாகும். உரிய பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள அரசிற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் போன்றவற்றை எந்தவோர் அரசியல்வாதிக்கு, அலுவலருக்கு, வேறொரு நபருக்கு தேர்தல் காலப்பகுதி முழுவதற்குமென குறித்தொதுக்கிக் கொடுப்பதை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தங்குமிட வசதிகளைப் பெறுகின்ற நபர்களுக்கு அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்திற்குரித்தான கட்டிடங்கள் மற்றும் அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றை அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான உருவப் புகைப்படங்கள் என்பவற்றை காட்சிக்காக வைப்பதற்குப் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

(ii) அரச, மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்கள் அல்லது வெற்றுக் காணிகள் மற்றும் மண்டபங்களை அல்லது அவ்வாறான வேறு கட்டிடங்களை ஒவ்வோர் அரசியல் கட்சி/ சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்புப் பிரச்சாரக் கூட்டங்களுக்காகக் குறித்தொதுக்கி வழங்கும்போது எந்தவொரு கட்சிக்கும்/ சுயேச்சைக் குழுவிற்கும் அல்லது வேட்பாளருக்கும் விசேட கவனிப்பு, முன்னுரிமை அல்லது பாரபட்சமொன்று காட்டத்தக்கவாறு குறித்தொதுக்குதல் கூடாது. அவ்விடங்கள், கட்டிடங்களைக் குறித்தொதுக்கி வழங்குதல் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான இடங்களை ஏனைய கட்சிகளுக்கு/ குழுக்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாதவாறு ஏதேனும் ஒரு கட்சிக்கு/ குழுவுக்கு/ வேட்பாளருக்கு அல்லது வேறு பணியொன்றுக்காக தொடர்ச்சியாகக் குறித்தொதுக்கி வைத்திருத்தல் கூடாது.

7. பொது விடயங்கள் :

(i) அரச ஆதனங்களை முக்கியமாக அரச நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை மற்றும் அலுவலர்களைத் தேர்தலோடு தொடர்புடைய கட்சி/ குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பில் ஈடுபடுத்த எவ்விதத்திலும் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசர கடமை நடவடிக்கைகள் அல்லது விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஆற்றுதல் போன்ற விடயங்களை சமர்ப்பித்து கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிப்புக்காக (இன்றேல் தடுக்கும் நோக்கத்திற்காக) தேர்தல் பிரதேசங்களுக்கு வெளியிலிருந்து அரசாங்கத்தின்/ அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்களையும் அரசாங்கத்தின்/ அரசுக்குச் சொந்தமான அல்லது வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களையும் வேறு அலுவலகங்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு இணைத்தல் தேர்தல் பிரதேசங்களின் அலுவலகங்களுக்கு இணைத்தல் போன்ற முறையற்ற செயல்கள் நிகழ்வதற்கு எவ்வலுவலரும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தின், மாகாண சபைகளின், உள்ளூராட்சி நிறுவனங்களின் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரச வங்கிகள், நியதிச் சட்ட வேறு நிறுவனங்கள், அரசாங்க பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்குமுரிய ஊடக அலகுகளுக்குரிய அலுவலர்கள், வாகனங்கள், உபகரணங்கள் என்பவற்றை கட்சியொன்றை/ குழுவொன்றை வேட்பாளர் ஒருவரை ஊக்குவிக்கும் பணிக்காக ஈடுபடுத்தக் கூடாது. சாதாரண நிலையின்கீழ் ஏதேனும் ஓர் அரச நிறுவனத்திற்குரிய மேடைகள் சோடனைகள், உபகரணங்கள், வாகனங்கள், வானூர்திகள், ஹெலிகொப்டர்கள் என்பன குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதாயின் தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய குத்தகையை வழங்கல் அனைத்துக் கட்சிகள், குழுக்கள் என்பவற்றிற்கு பெற்றுக்கொள்ளத்தக்க சந்தர்ப்பங்களோடு கூடிய வெளிக்காட்டு தன்மையுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ii) அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது ஏதேனும் ஆண்டு விழா/ நினைவஞ்சலி நிகழ்ச்சி போன்றவற்றிற்காக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச நிதியை பயன்படுத்தி தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் போன்ற ஊடகங்கள் ஊடாக ஒலி/ ஒளிபரப்பல்/ பிரசுரித்தல் ஊடாகவோ பிரச்சார அறிவித்தல் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்துவதனூடாகவோ எந்தவொரு கட்சி/ குழு/ வேட்பாளர் ஒருவர் சார்பாக ஊக்குவிப்பு நடவடிக்கைகளையோ பாதிப்புறச் செய்யும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளக் கூடாது.

(iii) தேர்தலொன்றின்போது கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிப்பு அல்லது பாதிப்புறச் செய்யும் பணிக்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் விதத்திலான இத்தடையுத்தரவு எவ்வித தளர்வுக்குட்படாமல் செயற்படுத்தப்படல் வேண்டும். அந்தந்த அமைச்சின் கீழுள்ள அனைத்து திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அதேபோன்று அந்நிறுவனங்களின் அலுவலர்கள்

அறிவுறுத்தல்களுக்கும் பணிப்புக்களுக்கும் அமைய நடவடிக்கை எடுக்கிறார்களென்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக்கொள்ளல் அத்தியாவசியமாகும்.

(iv) தேர்தலோடு தொடர்புடைய அனைத்துச் சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ (2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததாகும்.

(v) இப்பணிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுகின்றதெனவும் மாகாண சபைகளின் பிரதம அமைச்சர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்களை அறிவுறுத்தல் பிரதான செயலாளர் மற்றும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பாகும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(vi) பொருத்தமானவிடத்து, ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோரை இந்த பணிப்புரைகள் தொடர்பாக அறிவுறுத்தவும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(vii) அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ நிறுவனங்களின் பிரதானிகள், பிரதான கணக்கீட்டு இன்றேல் கணக்கீட்டு அலுவலர்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுப்பதும் உரிய அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

(viii) இந்தப் பணிப்புகளுக்கு அமைவாக நடவடிக்கையெடுக்காமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 104 ஏஏ ஆம் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய ஒரு குற்றமாகுமென்பது குறித்துக்காட்டப்படுகின்றது.

இப்பணிப்புக்களில் அரசு என பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழங்கள், அரசாங்கத்திற்குக் கையேற்கப்பட்ட கம்பனிகள் ஆகிய அனைத்து நிறுவனங்கள் மற்றும் 50% வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட அரச அல்லது அரச கம்பனிகளுக்குரிய நிறுவனங்களென பொருள் கொள்ளப்படும்.

அரச அலுவலர்கள் மற்றும் ஊழியர்களென பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் பணியாற்றுகின்ற மற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சம்பளமொன்றை அல்லது படியொன்றைப் பெற்றுக்கொள்கின்ற அனைத்து நபர்களென பொருள் கொள்ளப்படும்.

12-919

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.